REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 25உ செவ்வாய் (10—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 26உ புதன் (11—12—57) [இதழ் 153

ஆலயங்களின் வருமானம் ஒழுங்காகச் செலவிட மத்தியச் சட்டமாம்

புதுடில்லி, டிச. 9—

ஆலயங்கள், மற்றும் இதர மத நிறுவனங்களின் வருமானத்தை முறையாக நிர்வகிக்கவும், ஒழுங்காக அவற்றைப் பயன்படுத்தவுமாக ஒரு சட்டம் கொண்டு வருவதுபற்றி மத்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக மக்கள் சபையில், உள்நாட்டிலாகா மந்திரி பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

வீரம் செறிந்த முகம்! ஈரம் நிறை நெஞ்சம்!

தமிழனின் பண்பு தரணிக்கு அணி

சிதைந்த நிலையிலும் சிறப்பு காண்கிறோம்

குரோதம் போக்கும் வழி காணவேண்டும்

★

4—12—57 மாலை சென்னை—பூங்கா நகர், மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க நிதி திரட்டும் இயக்கத் துவக்க விழாவில் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்களும், திரு. அனந்தராமகிருஷ்ணன் அவர்களும், நானும் ஒருசேர இந்த விழாவில் கலந்துகொள்வதே செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எல்லோரும் ஆதரவு தந்து, அதை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதற்கு எடுத்துக்காட்டாகும்.

"இதில் அரசியல் தொடர்பு படுத்த வேண்டிய அவசியமில்லை. எந்த நாட்டுக்கும் இதிலே சம உரிமை இருக்கிறது. நாட்டின் எல்லைகளையெல்லாம் மறந்து செயலாற்றும் இயக்கம் இது. மனித உள்ளத்தை மிருக உணர்ச்சிக்கு அப்பால் இட்டுச்செல்லும் ஒரு மாபெரும் இயக்கம்.

"களத்திலே பட்ட கஷ்டங்களைக் கண்டு, ஒரு வாலிபனின் கருணை உள்ளத்திலே தோன்றிய எண்ணம்தான் உலகிலே இன்று இப்படிப்பட்ட ஒரு இயக்கமாக ஓங்கி வளர்ந்து தழைத்துவருகிறது.

"களத்திலே கண்ட கஷ்டங்களைக் களைய சாதி—மத—தேச உணர்வுகளை விட்டுக்கொடுத்து, மனித சமுதாயத்தில் யார் யார் இன்னல்களுக்காளாகிருர்களோ, அவர்களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம், தனித்து அந்த வாலிபனின் கருணையுள்ளத்திலே எப்படி உதித்தது?

"மனிதன் ஏன் சிற்சில வேளைகளில் கருணையுள்ளங்கொண்டு வாழ்க்கையை நல்ல முறையிலே நடத்துகிருன்? சில நேரங்களில் சில காரியங்களில் கருணையற்றவனாய் தீய காரியங்களில் ஈடுபடுகிருன்?—யாருக்கும் இந்த எண்ணம்தான் தோன்றுகிறது. போர்க்காலத்தில் மட்டுமல்ல— சமாதான காலங்களில்கூட போர்க்காலத்தைவிடக்கொடுமைகள் நடக்கும்படியாக அமைந்துவிடுகின்றன.

"சாதி—மதங்களை மறந்து, நாட்டு எல்லைக்கோட்டையும் மறந்து—உலகில் எங்கு கொடுமைகள் நடந்தாலும் அங்கு சென்று பணியாற்றக்கூடியது இந்தச் செஞ்சிலுவைச் சங்கம். குறிப்பிட்ட எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் இதில் தொடர்பு இல்லை. இதிலே எந்தக் கட்சியும் ஈடுபடலாம்; எந்தக் கட்சிக்கும் சம உரிமையுண்டு.

"மனிதன் எப்பொழுது கொடுமைகளைக் கூசாமல் செய்கிருன்? எந்த நேரத்தில் அந்தக் கொடுமைகள் கூடாது என்று நினைக்கிருன்?—இதற்கு, 'மனிதன் கெட்டவனா, நல்லவனா' என்ற ஆராய்ச்சியிலே நான் இறங்கச் சொல்லவில்லை. நல்லவர்களும் சில நேரங்களில் கெட்டவைகளைச் செய்கிருர்கள். தேவநாம பஜனை செய்பவர்களும், சில நேரங்களில் மிருகங்களோடு போட்டியிட்டு வீழ்த்தக்கூடிய அளவுக்கு வெறிகொள்கிருர்கள்.

"உலகம் பூராவிலும் ஏன் இந்த நிலை இருக்கிறது? மார்க்கங்கள் பல இருக்கின்றன; இருந்தும் பயன்படவில்லை. போட்டி, பூசல், பொருமை இவைதான் மனிதனைக் கெட்டவனுக்குகின்

மேல் நிலை சென்றோரெல்லாம் தாழ்ந்த எண்ணத்தை விட்டவரல்லர்

கருத்துப் புரட்சி கேட்போரைக் காட்டுமிராண்டி என்பது தவறு

பழுதான பார்வையே அப்பேச்சுக்குக் காரணம்

றன. மனிதன் நல்லவனுகத்தானிருக்கிருன்; சில வேளைகளில் விரோத உணர்ச்சி மேலிட்டு கெட்ட காரியங்களைச் செய்ய அவனைத் தூண்டுகிறது.

"நான் ஏதோ அரசியல் பிரச்சினையைக் குறிப்பிட்டுப் பேசுவதாக எண்ணிவிட வேண்டாம் என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். இந்தியத் துணைக்கண்டத்தில் இஸ்லாமியர்களுக்கும், இந்துக்களுக்கும் திடீரென விரோதம் மூண்டு—குரோதம் சூழ்ந்து ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டதைப் பார்த்தோம். குழந்தைகள் என்றுகூடப் பார்க்காமல் வெட்டி, குத்திக் கொடுமைகள் புரிந்தார்கள்; இரு தரப்பிலும் சேதம் ஏற்பட்டது. அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு நல்லவைகளைக் காணவில்லை. அவர்களெல்லாம் பக்தி மிக்கவர்கள்தான்; 'அல்லா, ஆண்டவன் இரண்டும் ஒன்றுதான்' என்று அழுத்தி அழுத்திப் பேசியவர்கள்தான்; 'இந்துவும்—முஸ்லீமும் ஒன்றுதான்; இஸ்லாமியரும் கிருஸ்துவரும் ஒன்றுதான்' என்று தத்துவங்களை எடுத்து எடுத்துச் சொன்னவர்கள்தான்.

"உள்ளத்தில் எழும் எரிமலையை அடக்க முடிந்தால்தான் கிரந்தரமான நன்மை ஏற்படும். அதற்கான காரியங்களை இந்தச் செஞ்சிலுவைச் சங்கம் செய்ய முயன்றால் நல்ல பலனேற்படுமென்று கருதுகிறேன். கொடுமைகளைவிட இந்த உள்ள எரிமலையை அடக்குவதுதான் சிரமமான காரியம்.

"குரோதத்தை அடக்க முயற்சி எடுத்தால், ஓரளவு அடக்குவதற்கு ஏற்ற திறமை—உலகில் உள்ள பல்வேறு வகுப்பினரைவிடத் தமிழ் இனத்துக்குத்தான் இருக்கிறது; நாம் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் நான் இதைச் சொல்லவில்லை; வரலாற்று உண்மை இது!

"பாரதக் கதையில் கௌரவர்களுக்கும் — பாண்டவர்களுக்கும் உரிமைக்காகச் சண்டை நடந்தது. 'கௌரவர்களைத் தாக்கினால், அவர்கள் பக்கமுள்ள பல ஆச்சாரியார்களையும், குருமார்களையும் தாக்கவேண்டி நேரிடுமே; பல பாவங்களைச் செய்தவர்களாவோமே' என்று அர்ச்சுனன் தயங்கினுன்; அந்த நேரத்தில் 'ஆண்டவன் அவதாரமான' கிருஷ்ணபகவான், அர்ச்சுனனுக்குத் தைரியம் கொடுத்தார்—'நீ தயங்காமல் போரிடு; அதனால் யாரேனும் இறந்தால் அதற்குக் காரணம் நான்தான்—நீயல்ல; என் மீது அந்தப் பாரத்தை போட்டு விட்டுப் போரிடு' என்று உபதேசம் புரிந்தாராம்.

"இதற்கு, பேரறிவு படைத்தவர்களெல்லாம் ஏதேதோ தத்துவங்களைக் கற்பித்துப் பேசுவார்கள்; உண்மையில் இரு தரப்பிலும் வெட்டிக்கொண்டு சண்டையில் பலர் மாண்டனர்; அந்தநேரத்தில் அந்த யுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குச் சோறுபோடும் பேறுபெற்றவன் ஒருதமிழ்மன்னன் என்று பாரதத்திலேயே கூறப்படுகிறது.

"சோறுபோடும் பணியை ஏற்றுக்கொண்ட தமிழர்கள், சோறு யாருக்குப் போடலாம்—பாண்டவர்களுக்குப் போடலாமா, கௌரவர்களுக்குப் போடலாமா—என்று யோசிக்கவில்லை; எந்தப் பக்கம் 'பகவான் கடாட்சம்' இருக்கிறது என்பதைக்கூட அவர்கள் பார்க்கவில்லை; களத்திலே யார் யார் கஷ்டத்துக்குள்ளானுர்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் சோறு படைத்தார்கள் தமிழர்கள். அன்றைய தினமே முதல் செஞ்சிலுவைச் சங்கத்தைத் துவக்கினுன் தமிழன் என்று கூறலாம்! அந்த நல்ல பண்பாடு நல்லவேளையாகச் சிதைந்து போய்விடாமல் இன்றும் தமிழர்களிடமிருந்து வருகிறது; சிதைய ஆரம்பித்துவந்தது; ஆனலும் முழுதும் சிதைந்து விடாமல் பாதுகாத்து வருகிறார்கள் தமிழர்கள்! எனவே, செஞ்சிலுவைச் சங்கம் இந்த நாட்டில் நல்லமுறையில் அறிமுகப்படுத்தப்படுமானுல், அது நன்ருகத் தழைக்கமுடியும்—அதை நிலைக்கவைக்கமுடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

"சண்டைக் காலத்தில் மட்டுமன்றி, சமாதான காலத்திலும் நம் நாட்டுக்கு, செஞ்சிலுவைச் சங்கம் தேவை. அப்படிப்பட்ட

பகை ஒழிய பேதம் ஒழிய வேண்டும்

செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ள வேண்டிய சீரிய பணி

அண்ணா தரும் அரிய விளக்கம்

அரசியல் தொடர்பற்ற அமைப்பு மிகமிகத் தேவை.

"அரசியல் தொடர்பு இல்லாதவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்வதை சிலர் கௌரவமாக நினைக்கிருர்கள். அவர்கள் அரசியலைத் தீண்டாவிட்டாலும் அரசியல் அவர்களை விடுவதில்லை. இன்றைக்கு நாட்டை ஆளுபவர்கள் அரசியல்வாதிகள்தான்; நாடு முழுவதற்குமான சட்டங்களைத் தீட்டுபவர்கள் அரசியல்வாதிகள்தான்; அந்தச் சட்டம் எல்லோரையும்தான் கட்டுப்படுத்துகிறது. அரசியல்வாதியல்லாதவர்களையும் சட்டம் கட்டுப்படுத்தத்தான் செய்கிறது. எனவே, அரசியல்வாதியல்லாதவர்களுக்கும் அரசியலில் அக்கறை இல்லாமல் இருக்கமுடியாது — இருக்கக் கூடாது.

இப்போது சமுதாயத்திலே குரோதமும், அமளியும் ஏற்படக் காரணம் என்ன? நீங்கள் அமளியை உண்டாக்குவீர்கள்; நாங்கள் அதை வந்து அடக்க வேண்டுமா? என்று சில அரசியல் சார்பற்ற அனுபவப் பேரறிஞர்கள் கேட்கக் கூடும். அமளி தீர்வதற்கான மார்க்கத்தை மனிதப் பண்பாட்டின் விளைவுகளை அறிந்த அனுபவமுள்ளவர்கள் தங்கு தடையின்றி தரவேண்டும்.

"இங்கு நீங்கள் இவ்வளவு பெருவாரியாக வந்து கூடியிருப்பதற்குக் காரணம், 'காந்த சக்தி படைத்த அண்ணாதுரைதான்' என்று டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; நான் காந்தசக்தியாக இருந்தாலும், டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்களைப் போன்ற அனுபவ உலையில் வைத்து அடித்தால்தான் காந்தம் சக்தி பெறும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

"சமாதான காலங்களிலும் மக்கள், தொல்லைகளைத் தாங்கிக் கொள்ள நேருகிறதே, ஏன்? தொல்லைகளைக் கண்டும் கழிவிரக்கம் கொள்ளவில்லையே, ஆட்சியாளர்கள் ஏன்? சமாதான காலத்திலும் ஏன் செஞ்சிலுவைச் சங்கதின் பணி தேவைப்படுகிறது?

"தமிழர்கள் தங்கள் வீரத்தைக் காட்டும் வாய்ப்பு வரும்போது என்றுமே தயங்கியதில்லை. கலிங்கத்திலும் கடாரத்திலும், இலங்கையிலும் யவனத்திலும் வெற்றிக் கொடி நாட்டியவன்தான் தமிழன் வெற்றியையே குறிக்கோளாகக் கொண்ட நேரத்தில் போர் நடத்திய தமிழன், சமாதான காலத்தில் மக்கள் நோயற்று, வளமுற்று வாழ்வதையே பெருமைக்குரியதாக எண்ணினுன்.

"சங்க இலக்கியத்திலே, தமிழ் மன்னன் ஒருவன், பெரும் புலவர் ஒருவரைப் பார்த்து 'வயதாகியும் தலை நரைதிரை இல்லாமல் இருக்கிறதே, அது எப்படி?' என்று கேட்கிருன்.

"அதற்கு அந்தப் புலவர் மன்னனைப் பார்த்து, 'தாங்கள் ஆளும் நாட்டிலே நரை - திரை - மூப்பு-இல்லை; அத்தனை நல்ல ஆட்சி இது; கவலையற்றிருக்கிறேன்; அதனால் தலைநரைக்கவில்லை' என்ருராம்!

இராமாயணத்திலே ஒரு கட்டம்—தசரதன், கண்ணாடியில்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடு[illegible]
சென்னை 10—12—57 செவ்வாய்

வெற்றி முழக்கம்!

தென்னாட்டவர் மீது தாங்கள் கொண்டுள்ள ஆதிக்கத்தினை, அந்த ஆதிக்கத்தின் விளைவாகத் தங்களுக்குக் கிடைத்துள்ள தற்காலிக 'அந்தஸ்தி'னைக்கொண்டே உலகின் கண்ணுக்குத் தெரியாமல் திரையிட்டுவிடலாம் என்று வடவரில் விவேகமுடையவர்கள் நம்பமாட்டார்கள் என்று நாம் கருதுகிறோம்.

அவர்களிலே சில பெரிய மனிதர்கள், தங்களைச் சுற்றிலும் அழைத்துவரும் 'அதிகாரத் தோரணைகளைக் காட்டி, 'வட நாட்டு ஆதிக்கம் என்பதெல்லாம் வெறும் அபத்தம்' என்று மறுத்துரைத்துவிடுவதினாலேயே, உண்மையை இருளிலே தள்ளிவிடமுடியாது.

மேலும் இந்த உண்மையை, ஆதிக்கத்தின் முழுப் பலன்களையும் சொட்டு விடாமல் சுறந்து சுவைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சுலபத்தில் ஒப்பிவிடுவார்கள் என்றும், அந்த ஆதிக்கத்தைக் கண்டிப்பவர்களோ அல்லது அந்த ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமெனத் தாகம் கொண்டவர்களோ, பைத்தியக்காரத்தனமாக நம்பிக் கொண்டிருக்கவில்லை. அல்லது இந்தப் பெரியவர்கள், 'புதிதாக இப்படி ஒரு கூச்சல் கிளம்பியிருக்கிறது' என்று, தங்களுக்கு இப்போதுதான் இந்தக் குரல் கேட்டதுபோல பாவனை செய்வதின் மூலம் தங்களது பெரிய மனிதத்தன்மைக்குச் சுட்டிக்காட்டும் இலக்கணத்தில், ஆதிக்கத்தினால் வாழ்வைப் பறிகொடுத்து நிற்கும் மக்கள் மனதைப் பறிகொடுத்துவிடுவார்களோ என்றும் அஞ்சவில்லை. எதிர்ப்போர்மீது தங்களுக்குப் பழக்கமாகிவிட்ட சில தடித்த சொற்களை எறிந்துவிடுவதினாலேயே, தங்களின் ஆதிக்கம் உரம் பெறும்'என்று அந்தப் பெரியவர்கள் துணிவுடன் நம்பிக் கொண்டிருப்பதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

நாம் கவலைப்படுவதெல்லாம், இந்த வடநாட்டு ஆதிக்கத்தினால் தங்களின் வாழ்வையும், வளத்தையும் பறிகொடுத்து வருகிற தென்னாட்டு மக்கள்—தங்களின் தொன்மைமிகு பண்பாட்டுப் பெருமையும், வீரமிகு வரலாற்றுச் சிறப்பும் இடைவிடாமல் அவமானப்படுத்தப்பட்டு, சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருவதைக்கண்டு வரும் மக்கள்—இந்த ஆதிக்கத்தை ஒழித்து, விடுதலை பெற எவ்வளவு விரைவாக ஆவல் கொண்டு குமுறி எழப்போகிறார்கள் என்பதைப் பொறுத்ததுதான்!

இந்த ஆதிக்கத்தின் தலைமைப் பீடமான டெல்லி, இன்றைய அரசியல் அமைப்பில் பூண்டுள்ள தோற்றம் எத்தகையது என்பதை, மங்காத பார்வையுடையோர் தெளிவாகக் கண்டுதான் கூறியிருக்கின்றனர்.

"மாநில அரசாங்கத்திற்கு பிச்சை அளிப்பதுபோல சிறுசிறு கவளங்களை அளித்து ஆசை காட்டி, மத்திய அரசாங்கம் அதிகாரங்களை எல்லாம் தன்னிடத்தில் குவித்துக்கொள்ளும் கேவலமான முறை வளர்ந்துவருகிறது ...... இப்படி அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படும் முறையையும், போக்கையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்"

என்று டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள், காஞ்சி நகரசபை தமக்கு, கடந்த வாரம் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

எல்லா அதிகாரங்களும் டெல்லியில் என்ற இந்த உண்மையை வெளிப்படையாகக் கூறியவர், டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள்தான் என்பதல்ல; எண்ணற்றவர்கள் எடுத்துரைத்து, ஏற்கனவே தங்களின் வேதனையை வெளிக்காட்டியாயிற்று.

டெல்லியில் அதிகாரங்கள் அனைத்தும் குவிவதினால் தங்களுடைய நலன்கள் பாதுகாப்பாயிருக்கும் என்பதுடன், அவை மேலும் பெருகும் என்று வடவர் கருதுகின்றனர் என்பதற்கு, அவர்களில் குறிப்பிடத்தக்க எவரும் இந்த சனநாயக விரோதமான போக்கினைச் சாடாமலிருப்பதே சான்றாகும். ஆனால், அதிகாரங்கள் அனைத்தும் டெல்லியில் குவிந்திருப்பதால், தங்களது சகலதுறை நலன்களும் தொடர்ந்து ஆபத்துக்காளாகி பறிபோய் வந்திருப்பதுடன், எதிர்காலமும் வெகு நிச்சயமற்றதாக திட்டமிட்டு ஆக்கப்பட்டுவருவதையும்காணும்தென்னாட்டு மக்கள், வடவர் தங்கள்மீது ஆதிக்கஞ் செலுத்தத் துணை நிற்கும் டெல்லியை, எப்படிக் கண்டிக்காமலிருப்பர்?

இன்று, தென்னாட்டு மக்கள் சிந்தித்துக் கொண்டிருப்பதெல்லாம், தங்கள் மீது வடநாட்டின் ஆதிக்கம் இருக்கிறதா, இல்லையா என்ற கேள்விக்குப் பதில் அல்ல—அந்தக் கட்டம் தாண்டி நெடுநாட்களாகிவிட்டன—வடநாட்டு ஆதிக்கத்தை முறியடித்து, தங்களது நலன் காத்துக்கொள்ள, தங்களுக்கு உரிய சுதந்தர அரசை நிறுவுவதற்கான வழிவகைகள் பற்றித்தான்!

மனச்சாட்சியின் கதவுக்கு, நிரந்தரமாகத் தாளிட்டுக்கொள்ளலாம் என்று நப்பாசை கொண்ட அப்பாவிகளையும், அரசியலில் சாதாரணமாகக் கொண்டிருக்கவேண்டிய அக்கறையும் தெளிவும கொண்டில்லாதவர்களையும், சுயநலத்திற்காக அரசியலைப் பிழைப்பாக்கிக் கொண்டவர்களையும், இன்னும் தங்கள் இன — மொழி — பண்பாட்டுப் பெருமையை உணராதவர்களையும் தவிர, ஏனைய மக்கள், வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற போர்ப்படை கண்டுவிட்டார்கள். அந்தப் படையின் வெற்றி முழக்கம சென்னை சட்டசபையிலும், டெல்லி மாநகரிலும்கூட கேட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உணவு நிலைமை

சென்னை, டிச. 9—

நவம்பர் 15-ம் நாளுடன் முடிந்த இரு வாரங்களில் முதல் பாதியில் தென்னார்க்காடு, சேலம், திருச்சி, தஞ்சை, மாவட்டங்களில் சுமாரான மழையும், வடார்க்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை மாவட்டங்களில் பலத்த மழையும், செங்கற்பட்டு, சென்னை, நீலகிரி ஆகியவைகளில் மிக பலமான மழையும் இருந்தது.

இந்த இரு வாரங்களில் பிற்பாதியில் சென்னை, தென்னார்க்காடு, வடார்க்காடு, சேலம், திருச்சி, நீலகிரி, திருநெல்வேலி, செங்கற்பட்டு, மாவட்டங்களில் சுமாரான மழையும், தஞ்சை, இராமநாதபுரம், கோவை, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் பலத்த மழையும் இருந்தது. வடார்க்காடு, சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் போதுமான தண்ணீர் விநியோகம் இருந்தது.

தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் சம்பா பயிருக்குப் பூச்சி விழுந்தது என்பது தவிர, எல்லா மாவட்டங்களிலும் நிலுவையிலுள்ள பயிர்கள் சுமாராக இருந்தன. செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தின் இரு பகுதிகளில் பயிர்களுக்குப் பூச்சி விழுந்திருந்தது.

வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், திருச்சி, கோவை, செங்கற்பட்டு, மதுரை மாவட்டங்களில் நெல் அறுவடைப் பரப்பளவு அதிகம் இல்லை; மகசூல் சுமார்.

சேலம், தஞ்சை மாவட்டங்களில் ராகி அறுவடைப் பரப்பு அதிகம் இல்லை; மகசூல் சுமார். வடார்க்காடு, கோவை மாவட்டங்களில் கம்பு அறுவடைப் பரப்பளவு அதிகம் இல்லை; மகசூல் சுமார்.

ஆசிய நாடுகளில் நெல் விளைச்சல்

திருப்திகரமாக இருக்கக்கூடும்

இவ்வாண்டில், ஆசிய நாடுகளில் நெல் விளைச்சல் திருப்திகரமாக இருக்கலாம் என்று காமன்வெல்த் பொருளாதாரக் குழுவின்நவம்பர் மாத அறிக்கை கூறுகிறது,

சென்ற ஆண்டுக்குக் குறைவில்லாமல் மகசூல் கிடைக்கலாம்; பாகிஸ்தானில் சாகுபடிபரப்பு அதிகரித்திருப்பதால் மகசூலும் அதிகரிக்கக்கூடும்; மற்ற நாடுகளிலும் பயிர் செழிப்பாக இருப்பதால் நல்ல விளைசசலிருககும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.

2,100 சதுரமைல் ஏரி!

2,100 சதுரமைல் பரப்புள்ள ஒரு செயற்கை ஏரியை அமைப்பதில் சோவியத் இயந்திரங்கள் முனைந்திருப்பதாகச்செய்திஒன்று தரப்பட்டிருக்கிறது.

உலகிலேயே இதுதான் பரந்த ஏரியாக இருக்குமாம! 700 கோடி ஆயிரம் கன அடி தண்ணீர்; இதில் தேக்கி வைக்கப்படுமாம்! 20,000 மரம்வெட்டிகள் வேலையைத் துவக்கிவிட்டனராம்.

கேட்டீரா, சேதி!

பீகிங், டிச. 9—

சீனாவில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக, தொழில் துறையில் 130 சதவிகிதம அதிகரிததுள்ளது எனறு திட்டக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்திய இரயில்வேக்களுக்கு தேவையான 3,000 'வோல்ட்' மின்விசை இரயில் எஞ்சின்களை அனுப்ப பிரிட்டனிலுள்ள நிறுவனம ஒன்று ஒப்புக்கொண்டிருக்கிறதாம! இந்த எஞ்சின்கள் மணிக்கு 70 மைல்கள் வேகத்தில ஓடக்கூடியவையாம்!

மாணவரும் அரசியலும்

வி. வி. கிரி கருத்து

"மாணவர்களாயிருக்கும்போது நேரடியாக அரசியலில் ஈடுபடாதீர்கள்; ஆனால், பல்வேறு அரசியல் போக்குகளையும்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்—புரிந்துகொள்ளவேண்டும்; அப்போதுதான், படித்து முடிந்ததும் நீங்கள் உங்கள் பொறுப்புகளை உணர்ந்துகொள்ள முடியும்"

இவ்வாறு, அலகாபாத் மாளவியா கல்லூரியில், மாணவரிடை பேசும்போது, உ. பி. கவர்னர் வி. வி. கிரி தெரிவித்திருக்கிறார்.

பழைய தவறுகளுக்குப் பரிகாரமா?

சென்னை அரசாங்கத்தில் பல்வேறு இலாகாக்களில் தேவைக்கு அதிகமாக கார்கள், ஜீப்புகள் உள்ளன என்று 10 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்து வரும் காங்கிரஸ் அரசாங்கம் இப்போது கண்டுபிடித்துள்ளதாம்.

இந்த உபரி வண்டிகளை நகரப் போக்கு - வரத்து, மாவட்டப் போக்கு-வரத்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுமாம்.

மராமத்து இலாகா செயலார் செட்டூர் நடத்திய விசாரணையின் விளைவே இந்த நடவடிக்கை.

தனிப் போலீஸ் ஐ. ஜி.

கேரள சர்க்கார் ஏற்பாடு

திருவனந்தபுரம், டிச. 8—

பொதுவாக, போலீஸ் இலாகாவின் திறமையை மிகுவிக்கவும் குறிப்பாகக் குற்றவாளிகளைச் சீக்கிரமாகக் கண்டுபிடிக்கவும், புலன் விசாரணையைத் துரிதப்படுத்தவுமாக ஒருதனிப்போலீஸ் 'இன்ஸ்பெக்டர்-ஜெனரலை' நியமிக்க கேரள சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

ஏற்கனவேயுள்ள போலீஸ் தலைமை அதிகாரிக்கு உதவியாக இந்தத் தனி அதிகாரி பணிபுரிவாராம்.

இவரின்கீழ், போக்குவரத்து, வரி விதிப்பு, குற்ற இலாகா, தீயணைக்கும் படை, 'சி. ஐ. டி.' முதலிய போலீஸ் துறைகள் ஒப்படைக்கப்படும் என்றும், இவர் அவ்வப்போது, தலைமை அதிகாரிக்கு சிக்கனநோக்குடன் இலாகாவைத் திறமையாக நடத்துவதுபற்றி அறிக்கைகள் தருவார் என்றும் கூறப்படுகிறது.

கிராமங்களுக்கு மின்சார விநியோகம்!

தனியாருக்கு விடப்படும்?

பம்பாய், டிச. 9—

கிராமங்களுக்கு மின்சார வசதியை உண்டாக்க முனையும் தனியாருக்கு உதவியளிப்பது பற்றி மத்திய அரசாங்கம் ஆராய்ந்துவருகிறதாம்.

1961-க்குள் 16,500 கிராமங்களுக்கு மின்சார வசதி தரப்படுமாம். இரண்டாவது திட்டக் காலத்தில் 69 இலட்சம் கிலோவாட் மின்சார சக்தி அதிகரிக்கப் படுமாம்.

இத்தனையும் எப்படி நிறைவேறும் எனவு ஐயுறுபவர்களுக்கு, இந்திய மின்சார நிறுவனத் தலைவர், 'அன்னியச் செலாவணி கையிருப்புக்கு ஏற்றவாறு திட்டங்களுககு முதலிடம் தரப்படும்' என்று கூறியிருப்பது தெளிவாக்கும்.

இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பினைக் கட்டுப்படுத்துவது பற்றி, பிரதமர் பண்டாரவிடம் டெல்லி சர்க்கார் ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் முறையிட்டிருப்பதாகவும், தொடர்ந்து கடிதப் போக்கு-வரத்து மூலம் இதுபற்றி விவாதிப்பர் என்றும் கூறப்படுகிறது.

'சுதந்தர மரபைக் கொன்றவர்களாவீர்'

விடுதலைப்போரில் ஈடுபட்ட வீராங்கனையின் எச்சரிக்கை

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து அல்ஜீரியா விடுதலைபெறவேண்டும் என்று மக்கள் போராடிவருவது தெரிந்ததே!

இந்தச் சுதந்தர எழுச்சியில் ஈடுபட்ட 22 வயது நிரம்பிய அல்ஜீரியப் பெண்மணி 'ஜமீலா'வுக்கு அல்ஜீரியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டது; ஆனால் அப்பெண்மணி இன்னும் அக்கிரம ஆதிக்கக்காரர்கள் தூக்கிலிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம், அப்பெண்மணி, இராணுவ விசாரணையின்போது துணிவுடன் வெளிப்படுத்திய உண்மைகளாகும்.

"விசாரணையில் கடுகளவும் நியாயமில்லை; நீதி புறக்கணிக்கப்படுகிறது. ஒன்றிரண்டு நாட்கள் அல்ல—17 நாட்கள் நான் துன்புறுத்தப்பட்டேன் என்று கண்ணியமாகக் கூறுகிறேன்.

'மனிதர்களாக உள்ளபிரெஞ்சு இராணுவத்தினருக்கு மனித உருவத்தை இழிவுபடுத்த உரிமை கிடையாது. நான் பெண்; என் உடலை இழிவுபடுத்துவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, கூறுங்கள்"

என்று, பிரெஞ்சு நீதிபதிகளை கேட்டு, திணறவைத்துள்ளார், அப்பெண்மணி!

இதை அறிந்த பிரெஞ்சு எழுத்தாளர்கள், உண்மையை விளக்கி, பொதுமக்கள் மன்றத்திற்கு இதனை அறிவித்து, பரபரப்பை உண்டாக்கியிருக்கிறார்கள்.

'ஜமீலா' இறுதியில், "நான் சாகப்போகிறேன்; அதைப்பற்றி கவலைப்படவில்லை; ஆனால், என்னைக் கொல்லும்போது உங்கள் நாட்டின் சுதந்தர மரபைக் கொன்றீர்கள் என்பதை மறவாதீர்" என்று எச்சரித்துள்ளார்.

போதனு மொழியில் மாற்றம்

நியாய அடிப்படையில் இருக்கவேண்டும்

'அவசரம் கூடாது' என எச்சரிக்கை

கல்கத்தா, டிச. 9—

"இப்போது பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் போதனு மொழியாக இருப்பதை மாற்றியமைப்பதில் அவசரம் கூடாது; உணர்ச்சி வசப்பட்டு செயல் படுவதில் பயனில்லை பகுத்தறிவுடன், நியாய அடிப்படையில் ஆராய்ந்து இதுபற்றி முடிவு செய்ய வேண்டும் மாற்றம் இயற்கையாக அமைய வேண்டுமே தவிர, புரட்சி மூலம் கூடாது" என்று சென்னை பல்கலைக்கழகத் தலைவர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் கூறியுள்ளார்.

சுதந்தரத்திற்குப் பிறகு சமுதாயச் செழுமை!

முதல் திட்ட வெற்றியின் முதல் பரிசு!

இரயில் பிரயாணம் செய்பவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு அரிசி உணவும், குறிப்பிட்ட அளவு கோதுமை 'சப்பாத்தி'யும், குறித்த விலையில் தரப்பட்டுவருவது தெரிந்ததே!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து; உற்பத்தியில் இலட்சணம் இப்போது வெளிப்பட ஆரம்பமாகியுள்ளது.

30 அவுன்சு அரிசி உணவின் அளவு 16 அவுன்சாய இனி குறைக்கப்படுமாம்!

8 'சப்பாத்தி'களின் எடை 10 அவுன்சாகக் குறைக்கப்படுமாம்.

இதற்கு ஏற்றவாறு விலையில் குறைவு ஏதும் இருக்காதாம்; பழைய விலைக்கே விற்கப்படுமாம்!

பர்மாவாழ் இந்தியர் துயர்

'பிரச்சினை கடுமையானது அல்ல' என்கிருர் யூ. நூ.

புத்தகயா, டிச. 8—

"பர்மாவாழ் 'இந்தியர்'களின் பிரச்சினைகள் மிகச் சாதாரணமானவை — கடுமையானவை அல்ல; இரு சர்க்கார்களும் கலந்து பேசி அவற்றிற்குத் தீர்வு காண்பது சுலபம்" என்று, பர்மியப் பிரதமர் யூ-நூ, பத்திரிகையாளரிடம் உறுதி தந்திருக்கிருர்.

பர்மாவின் புதிய குடியுரிமைச் சட்டத்தின் விளைவாக எண்ணற்ற 'இந்தியர்'கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டி நேரிடும் என்றும், பர்மியக் குடிமக்களாக அங்கீகரிக்கப்படாததினுல், நிலமுடைய எண்ணற்ற இந்தியர்கள் தங்களின் நிலத்தை விட்டு வெளியேற வேண்டியிருக்கும் என்றும், எனவே இந்திய சர்க்கார் பர்மாவாழ் இந்தியர்களுக்கு உதவ பர்மிய சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்க வேண்டும் என்றும், கடந்த அக்டோபர் திங்களில் பண்டிதரிடம் அவர் இரங்கூன் வந்தபோது, பர்மாவாழ் 'இந்தியர்'கள் முறையிட்டிருந்தது நினைவிலிருக்கலாம்.

பர்மாவாழ் 'இந்தியரு'க்கு நெருக்கடி நிலைமை

இரங்கூன், டிச. 7—

பர்மாவில் வாழும் 'அன்னியர்'களுக்கு நெருக்கடியான நிலைமை உருவாகியுள்ளது.

பர்மா தொழில் வளர்ச்சி இலாகாவைச் சேர்ந்த ஏற்றுமதி—இறக்குமதி நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள 'அன்னியர்'கள், பர்மாவின் குடியுரிமையை டிசம்பர் 31-ந் தேதிக்குள் பெற்றிருக்காவிட்டால், அவர்கள் அனைவரும் அன்னியர் என்றே கருதப்படுவார்களாம்.

பர்மாவில் ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனங்களிலில், இந்தியாவிலிருந்து பர்மாவுக்குக் குடியேறியவர்கள் வேலைசெய்து வருகின்றனராம். அவர்களில் பெரும்பாலோர் பல ஆண்டுகளுக்கு முன்னரே பர்மாவில் குடியுரிமை கோரியிருந்தும், இன்று வரை அவர்களின் மனுக்கள் கவனிக்கப்படாமல் உள்ளனவாம்.

இந்த அவல நிலையை, இந்தியப் பிரதிநிதிகள், பர்மா அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துள்ளனராம்.

இரண்டாவது பாண்டுங் மாநாடு!

"ஆசிய-ஆப்பிக்க நாடுகள் பாண்டுங்கில் கூடியதுபோல, மீண்டும் ஓர் முறை கூடுவதுபற்றி விவாதித்தார்களா?" என்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவை, பம்பாய் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது— 'அப்படிப்பட்ட மாநாடு கூட்டுவதற்கு இது தக்க தருணமல்ல' என்றும், 'அதனுல் உருவான பலன் எதும் காணமுடியாது' எனவும் பண்டித நேரு தெரிவித்த கருத்தினை நான் ஏற்றுக்கொண்டேன் — என்றும் அவர் கூறியிருக்கிருர்.

பயிற்சி முகாம்கள்!

பம்பாய், பெங்களூர், பரோடா, கட்டாக், கயா ஆகிய இடங்களில் ஆச்சாரியா வினோபாபாவேயின் சாந்தி சேனை பயிற்சி முகாம்கள் அமையும் என கூறப்படுகிறது.

முன்னுள் நேப்பாளப் பிரதமர் கைதாகி விடுதலை

அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்று தூண்டிய முன்னுள் நேப்பாளப் பிரதமர் கொய்ராலா உள்பட 50 பேர் கைது செய்யப்பட்டு, அரை மணி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்திற்கு டெல்லியின் கடன்!

திட்டக்குழு அனுமதித்து விட்டதாம்!

புதுடில்லி, டிச. 7—

1957-58-ம் ஆண்டு நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களுக்காக சென்னை மாநிலத்திற்கு ரூ. $2\frac{1}{2}$ கோடி கடன் கொடுப்பதை திட்டக்குழு அனுமதித்துவிட்டதாம்!

இந்தத் தொகையில் மணிமுத்தாறு, ஆரணியாறு, கிருட்டிணகிரி, சாத்தனூர், புதுக்கட்டளை புள்ளம்பாடி, நீர்ப்பாசனத் திட்டம்; பெரியாறு மின்சாரத் திட்டம், கம்பிகள் விநியோகத் திட்டம், இயந்திர விஸ்தரிப்புத் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படுமாம்!

உணவு உற்பத்தி

இலட்சிய அளவை அடைய முயற்சிகள் மேற்கொள்வராம்!

புதுடில்லி, டிச. 7—

இரண்டாவது திட்டக்காலத்தில் அதிகப்படியாக 150 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தி செய்வதாக இலட்சிய அளவை நிர்ணயித்துக் கொண்டது இந்திய அரசாங்கம்; ஆனுல் மேதா குழு, 100 இலட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்ய இயலும் என்று மதிப்பிட்டு அறிக்கையில் கூறியுள்ளது.

இருப்பினும், இலட்சிய அளவை அடைய இந்திய அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

"உணவு உற்பத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட எல்லாத் தொகையும் செலவிடப்பட்டதா?" என்று கேட்கப்பட்டபோது, 'மாநிலங்களில் சில செலவிடவில்லை' என்று உதவி உணவு அமைச்சர் கிருட்டிணப்பா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சிறுநீர்ப்பாசனத் திட்டங்களுக்காக மேலும் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

தர்ம தரிசனம்— கட்டண தரிசனம்!

திருப்பதி வெங்கடேசுவார் ஆலயத்தின் 'ஆனந்த நிலய விமானம்' புதுப்பிக்கப்படுகிறதாகவும், இந்த வேலை நடைபெறுவதை ஒட்டி தர்ம தரிசனம்-அதாவது, இலவச தரிசனம்பெற விரும்புவோர் காலை-பகல்-இரவு பூசைகளில் குறிப்பிட்ட நேரங்களிலேயே அனுமதிக்கப்படுவர் என்றும், கட்டணம் செலுத்தி தரிசனம் பெறுவோர் 'மூலவிக்ரக'த் தரிசனத்தை 'கல்யாண கட்ட மண்டப'பத்தில் எப்போதும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

எர்ணுகுளம் மாவட்டமாகும்

கள்ளிக்கோட்டை கார்ப்பரேஷனுகும்

கேரள சர்க்கார் முடிவு

கேரள மாநிலத்தில் மேலும் ஒரு மாவட்டம் உருவாக்கப்படும். எர்ணுகுளத்தைச் சுற்றியுள்ள தாலுகாக்களைக்கொண்டு இந்த மாவட்டம் அமையும்.

இப்படி அமைக்கவேண்டுமென எழுப்பப்பட்ட கோரிக்கைகளை ஒட்டியே, இந்த முடிவினை கேரள மந்திரிசபை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதோடு சேர்த்தால், கேரளத்தில் மொத்தம் ஒன்பது மாவட்டங்களாகும்.

கள்ளிக்கோட்டை நகரம் 'முனிசிபாலிடி'யாயிருப்பதை, 'கார்ப்பரேஷனு'க உயர்த்தவும் மந்திரிசபை முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நகரம்தான் கேரளத்தில் இரண்டாவது பெரிய நகரம்; இதன் மக்கள் தொகை 1,81,000. முதல் பெரிய நகரமான திருவனந்தபுரத்தின் மக்கள் தொகை 2,26,000 ஆகும்.

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

வெள்ளனூரில் திட்டம்

புதுடில்லி, டிச. 9—

அரசாங்க உதவித் திட்டத்தின் கீழ் ஒரு அறைபுடன்கூடிய 406 வீடுகள் வெள்ளனூரில் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

சென்னைக்கு ரூ. 13,39,800 மானியம் தரப்பட்டுள்ளது. 31—3—58-க்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தொழிலாளர் குடியிருப்புக்கு வசதி செய்து தரப்படும்.

யாருக்கு வேண்டும் இராணுவ உதவி?

அமெரிக்காவிற்கு டிட்டோ பதில்

இராணுவ உதவி தர அமெரிக்கா தயாராயிருப்பதாக அமெரிக்கத் தூதுவர் டிட்டோவிடம் கூறியதாகவும், 'எங்களுக்கு இராணுவ உதவி எதுவும் தேவை இல்லை' என்று யூகோ அதிபர் மறுத்துவிட்டதாகவும், இருவரின் சந்திப்பிற்குப் பிறகு கூறப்படுகிறது.

"எங்களுக்குத் தேவை எல்லாம் பொருளாதார உதவியே தவிர இராணுவ உதவி அல்ல; இந்த உதவியைக்கூட, எங்கள் கொள்கையைவிடப் பெரிதாக மதிக்கமாட்டோம்" என்றும் டிட்டோ கண்டிப்புடன் கூறிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

'அன்னை'- நாடக ஆரம்பவிழா

தோழமை நாடக மன்றத்தின் சார்பில், 27—11—57 மாலை 6 மணியளவில் சென்னை—எழுகிணறு, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு 179-வது எண்ணுள்ள இல்லத்தில், டாக்டர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் தோழர் ஆர். ஜார்ஜ் எழுதிய 'அன்னை' நாடகத் துவக்கவிழா நடைபெற்றது.

தலைவர் தனது முகவுரையில், சமுதாயத்துறையில் புதுமையை—புதுத் திருப்பத்தை உண்டாக்குவதற்கு நாடகங்கள் பயன்பட வேண்டுமென்றும், நாடகம் மிக பயனுள்ள பிரச்சார சாதனம் என்றும், மனித உணர்வுகளைத் தொடக்கூடிய அளவு நாடகம் எழுதப்பட வேண்டுமென்றும், இத்தகைய உணர்வுகளை மிக அழகாக 'அன்னை' பிரதிபலிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தோழர் ஆர். ஜார்ஜ் நாடகக் கதையின் சுருக்கத்தைச் சொல்லி நாடகத் துறை குறித்துப் பேசினுர்.

தோழமை நாடக மன்றத்தின் காப்பாளர்களாக திருமதி சத்தியவாணிமுத்து, தோழர் பொன்னுச்சாமி (சற்குணகேப்; உரிமையாளர்) ஆகியவர்கள் பணியாற்ற இசைவு தந்தனர்.

தலைவராக தோழர் எம். எஸ். முத்து; பொதுச்செயலாளராக தோழர் ஆர். ஜார்ஜ்; செயலாளராக தோழர் மு. கன்னியப்பன்; துணைத் தலைவர்களாக தோழர்கள் மலர்மன்னன், சு. பாலன்; பொருளாளராக தோழர் நீலம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—தூய சௌந்தர பாண்டியனுர் நினைவுப் படிப்பகம்

1—12—57 காலை 9 மணிக்கு படிப்பக மனையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, படிப்பகத்தின் ஆண்டு விழாவினைத் திங்களில் அண்ணு அவர்களைக்கொண்டு நடத்துவதெனவும், பொங்கல் விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவதன் பொருட்டு குறைந்தது 300 ஏழைகளுக்கு உண்டி வழங்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

அளக்குடியில் வள்ளுவர் படிப்பகத் திறப்புவிழா

1—12—57 மாலை 6 மணிக்கு அளக்குடி தி. மு. கழகச் சார்பில் தோழர் முத்து செயராமன் தலைமையில், மேற்படி படிப்பகத்தை திரு. ஈ. வி. சீனிவாசனும், அண்ணு திருஉருவப் படத்தை திரு. கே. ஏ. பத்மநாபனும் திறந்துவைத்தனர். திரு. ஈ. நந்தகோபாலன் கழகக் கொடியை ஏற்றினுர். படிப்பக வளர்ச்சி பற்றி கழகத் தோழர்கள் பேசினர்.

சென்னைத் தமிழ்ாசிரியர் கழகம்

1957—58-ம் ஆண்டுக்குப் பேராசிரியர் எம். இராசமாணிக்கம் தலைவராகவும்; எஸ். எஸ். அருணகிரிநாதர், அன்பு கணபதி, பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், பி. எஸ். சண்முகம், அமிர்தலிங்கனுர் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும்; வி. பலராம் அம்பை. சங்கரன் செயலாளர்களாகவும்; பேராசிரியர் மயிலை சிவ. முத்து பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்கள்.

சென்னை நகரசபை 'லாரி' ஊழியர் சங்கம்

சென்னை நகரசபை 'லாரி' ஊழியர் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் 13—11—57-ல் நடைபெற்றது. தொழிலாளர் தலைவர் திரு. ஜி. குசேலர் மேற்படி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கனவே திரு. சீதாராம(நாயுடு) தலைவராக இருந்தார். மற்ற நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பலன்தந்திருக்கிறதாம்!

புதுடில்லி, டிச. 7—

பட்டாசுகளின்மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை, 'அணுகுண்டு' 'சாம்பியன் பட்டாசு', 'பட்பட்டியாஸ்' ஆகிய ரகப் பட்டாசுகளுக்கு மட்டுமே பிரயோகமாகிறது என்றும், தடைவிதிப்பு நல்ல பலனைத் தந்திருக்கிறது என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறி போர்டு தலைவர் சேலம் வருகை

சேலம், டிச. 4—

அகில இந்திய கைத்தறி போர்டு தலைவர் டி. எஸ். ஜோஷி, உதவி டைரெக்டர் பி. சபாநாயகம், சென்னை கைத்தறி இலாகா டைரெக்டர் ஜி. இராமச்சந்திரன், மாநில கூட்டுறவு நெசவாளர் கழகத் தலைவர் நாச்சிமுத்து ஆகியோர் சேலம் மாவட்டத்திலுள்ள குமாரபாளையம் ஜமுக்காள கூட்டுறவு நெசவுக் கழகங்களையும், சேலத்திலுள்ள கூட்டுறவு நெசவாளர் கழகங்களை பார்வையிட்டனர்.

சேலத்தில் நெய்யப்படும் கைத்தறித் துணிகள் நல்ல தரமுடையதாக—அழகாக—நேர்த்தியாக—உறுதியாக இருப்பதாகவும் திரு. ஜோஷி கூறினுர். (ந. கி.)

முகவரி மாற்றம்

சென்னை—வண்ணை சிங்காரத் தோட்டம் 4-வது தெருவிலிருந்த உதயசூரியன் அறிவியல் மன்றம், வண்ணை, ஜி. ஏ. ரோடு, எண் 96 கட்டிடத்தின் மேல் மாடிக்கு ('சற்குண கேப்' பக்கத்தில்) மாற்றப்பட்டுள்ளது. கழகத் தோழர்கள் புதிய முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

★

தி. சு. கிள்ளிவளவன்
(திருவேங்கடம்)
10, குமாரப்பமுதலி தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

மறைவு

சென்னை—வண்ணைத் தோழர் டி. டி. இராதா அவர்களது சகோதரர் தோழர் டி. எம். பாபு 19—11—57-ல், விஷக் காய்ச்சல் காரணமாக அகால மரணமடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது குடும்பத்தார்க்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ஆ-ர்.)

* * *

சென்னை 27-வது வட்ட தி.மு. கழகத் துணைச்செயலாளர் ஆ. இராசன் அவர்களது அன்னையார் பார்வதி அம்மாள் 2—12—57ல், இயற்கை யெய்தியமைக்கு மேற்படி வட்ட தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

உதகமண்டலம் நகர தி. மு. க. கழகச் செயற்குழு உறுப்பினரான தோழர் பெ. சின்னசாமி இயற்கையெய்தியது குறித்து மேற்படி கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஹோராண்டுவில் விடுதலை எழுச்சி

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் விரைகிறது

குவாடிமாலா சொந்தம் கொண்டாடுவதாகப் புகார்

மத்திய அமெரிக்காவில் பிரிட்டிஷாருக்கு உள்ள காலனி, பிரிட்டிஷ் ஹோராண்டூராஸ் நாடு.

அங்கு தோன்றியுள்ள சுதந்தரக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல் ஒன்று அங்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த ஹோண்டூராசுக்கு அருகிலிருக்(கும்) குவாடிமாலா, ஹோண்டூராஸ் தனக்குச் சேர வேண்டுமெனச் சொந்தம் கொண்டாடுவதாகவும், 'கைவைக்காதே' என்று இதனை எச்சரிக்கும் வகையிலேயே, நாசகாரிக் கப்பல் ஜமைக்காவிலிருந்து விரைவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், ஹோண்டூராசின் இடதுசாரி அரசியல் தலைவரும், 'எக்சிகியூடிவ் கவுன்சில்' உறுப்பினருமான ஜியார்ஜ் பிரைஸ் என்பாரை, கவுன்சிலிலிருந்து நீக்கி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இதற்குக் காரணம், இவர், குவாடிமாலா சர்க்காருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய விவரங்களைக் கவர்னருக்குத் தெரியாமல் மறைப்பதாகவும், குவாடிமாலா சர்க்கார் ஹோண்டூராஸ் மீது கொண்டாடும் சொந்தத்தை மறுத்துரைக்க மறுப்பதாகவும் கூறப்படுகிறது.

ஹோண்டூராஸ் விடுதலை பற்றி விவாதிக்க லண்டன் சென்ற குழுவிற்குத் தலைமை தாங்கிய இந்த பிரைஸ், இன்னும் சட்டசபையில் ஒரு உறுப்பினராக இருக்கிருர்.

'நம் நாடு' கிடைக்குமிடம்

கோ. கைலாசம்
C/O ஹாஜா இண்டஸ்ட்ரீஸ்
அகிழாங்கரை தெரு
வல்லம் (தஞ்சை மாவட்டம்)

★

சா. தயாளன்
நம் நாடு விற்பனையாளர்
மெயின் ரோடு
காட்டுமன்னார்கோயில்
(சிதம்பரம் வட்டம்)

★

கோ. முனிசாமி
பொதிகை நிலையம்
புத்தக வியாபாரம்
தென்காசி

அண்ணா தரும் அரிய விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன் முகத்தைப் பார்த்தபோது தலையிலே நரை கண்டிருந்ததைப் பார்த்தானும்; அப்பொழுதுதான், தனக்கு வயதாகிவிட்டது—இராமனுக்குப் பட்டம் சூட்டவேண்டும் என்று நினைத்தானும், இது புராணக் கூற்று.

"புலவர் கூற்றையும் சொன்னேன்—புராணக் கூற்றையும் சொன்னேன். நான் புராணத்தை ஏற்றுக் கொள்ளாதவன்—புராணக் கருத்துக்கு சர். சி. பி. போன்றவர்கள் வேறொரு தத்துவத்தைக் கற்பித்துக் கூறக்கூடும். சங்க இலக்கியத்துக்கும் — புராணத்துக்கும் வேறுபாடு உண்டு.

"தமிழன் உயர்ந்த பண்புள்ள வீரன்; மனிதனை நன்றாக வாழவைப்பதைத் தன் உயர்ந்த பண்பாகக் கருதியவன்.

"இந்த நாட்டில் சாதிப் பாகுபாடுகளை நீக்குவதற்கு எல்லாப் பேரறிஞர்களும் ஒன்று சேர்ந்து அதற்கான மார்க்கத்தைக் காண முயலவேண்டும். 'துரதிருஷ்டவசமாக' இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மக்களிடம்—ஒரு குறிப்பிட்ட கட்சியிடம்—ஒப்படைக்கப்பட்டிருக்கிறது அந்த சாதி ஒழிப்பு வேலை.

"நான் வலியுறுத்திக் கூறுவதெல்லாம், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார்தான் அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றால்—அவர்கள் மட்டுமே ஒருபுறம் அந்த வேலையைச் செய்துகொண்டிருந்து, மற்றவர்கள் ஒதுங்கியிருந்துவிட்டால் இருசாராருக்கிடையில் துவேஷம் ஏற்படத்தான் செய்யும். அந்த துவேஷம் காரணமாகத் தங்களுக்கு என்ன சாதகம் கிடைக்குமென ஆராயும் அரசியல் கட்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. நல்ல வேளையாக, மக்களிடையே குரோத-உணர்ச்சி ஒழிய வேண்டுமென விரும்புபவர்களும் இன்னும் இருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் நாம் இந்த நல்ல காரியத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

"அரசியல் கட்சியையும் கடந்த பேரறிவாளர்கள்கூடி, இந்தத் தலைமுறையிலேயே செய்யவேண்டியுள்ள ஒன்று இந்த சாதி ஒழிப்பு வேலைதான்.

"குலத்திலே பல வேறுபாடுகள்; ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடுகள்; முதலாளி-தொழிலாளி என்ற வேற்றுமை; ஒரே ஊரிலே கிழக்குத் தெருவிலிருப்பவருக்கும் மேற்குத் தெருவிலிருப்பவருக்கும் பகை—இவற்றையெல்லாம் இன்று ஏட்டிலே காண முடியவில்லை; நாட்டிலே காண முடிகிறது.

"'தீயினால் உடலிலே சுட்ட புண் ஆறிவிடும்; ஆனால் நாவினால் உள்ளத்தைச் சுட்ட வடு ஆறாது' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். செஞ்சிலுவைச் சங்கம், மக்களின் உடலில் மட்டுமல்ல—உள்ளத்தில் ஏற்பட்டுள்ள புண்ணையும் போக்க முயல வேண்டும்; சாதியின் காரணமாக உள்ளத்தில் ஏற்படும் தழும்பை அகற்ற வேண்டும். உள்ளத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புண் நமக்கு மட்டுமல்ல—நம் குழந்தைகளையும் பாதிக்கக் கூடியவை.

"நாமாவது உலகம் காணாதவர்கள்; உலக மேதாவிகள் என்பவர்கள்கூட, 'இரண்டு சைனாக்களிலே எந்தச் சைனா நல்ல சைனா' என்ற பிரச்சினையிலே தலையிட்டு, குழப்பம் விளைவித்து வருவதைக் காண்கிறோம். டில்லியிலே நடந்த செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் இந்தக் கருத்தைக் கிளப்பி வெளிநடப்புச் செய்து குழப்பம் உண்டாக்க முயன்றதைக் கண்டோம்.

"இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், ஒருவன் கீழிருந்து மேல்நிலைக்குப் போவதனால், அவனிடமிருந்து வந்த தாழ்வான கருத்து போய்விடுவதாக இல்லை; அவன் அந்தத் தாழ்வான கருத்தோடுதான் மேலே போயிருக்கிறான் என்று பொருள்.

"ஒரு வீட்டின் மாடிக்கு நகை வியாபாரிபோனால் நகைகளோடு போவான்; மருத்துவன் போனால் கையில் மருந்துகளோடுபோவான்; கள்ளன் போனால் கையில் கன்னக்கோலோடுதான் போவான்; அதைப்போல, உலகிலேயே மிக மேல்நிலையிலிருந்தாலும் மிருக உணர்ச்சியை விட்டுவிட்டதாகப் பொருளில்லை.

"நான் சில தினங்களுக்குமுன் பத்திரிகையிலே செய்தியொன்று படித்தேன்; "அமெரிக்காவில் ஏழு நீக்ரோ மாணவர்கள், பாதுகாப்பு இல்லாமல் பள்ளிக்குப் போய் வந்தார்கள்' என்பதுதான் அந்தச் செய்தி. நீக்ரோ மாணவர்கள் பாதுகாப்பு இல்லாமல் பள்ளிக்குப் போய்வருவது உலக அதிசயமாக இருக்கிறது. 'இன்றுதான் போலீஸ் பாதுகாப்பில்லாமல் நீக்ரோ மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வந்தார்கள்' என்று பத்திரிகைகளெல்லாம் அதிசயச் செய்தியாக இதை வெளியிட்டிருந்தன; ஆனால் இன்னொரு செய்தியும் அதிலே இருந்தது; 'அந்த மாணவர்கள் பள்ளிக்குப்போகும் போதும், வரும்போதும் போலீசார் தொலைவிலிருந்தபடியே அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேராத வகையிலே கண்காணித்துக் கொண்டிருந்தனர் என்று அந்தச் செய்தி கூறுகிறது.

"நாம் ஏதோ, 'காட்டுமிராண்டிகள்'தான் அமெரிக்காவில் இருப்பதாக எண்ணக் கூடாது; நாம், அமெரிக்கா காட்டுமிராண்டித்தனமாக நடக்கிறது என்று எண்ணுகிறபோது, அமெரிக்கர்கள் இந்தியாவில் உள்ளவர்களை காட்டுமிராண்டிகள் என்று எண்ணுகிறார்கள்.

"இன்னும் சிலர் யார்யாரையோ பார்த்து காட்டுமிராண்டிகள் என்றுகூறுகிறார்கள்; அவரவர் உள்ளம்போல்தான் பார்வையும், எண்ணங்களும் இருக்கும்.

"எங்கு எது நடந்தாலும், அது காட்டுமிராண்டித்தனமாக இருந்தாலும் நாகரிகத்தால் அதைப் போக்க முடியவில்லை; நாதனைத் தொழுதோ, போதனை புரிந்தோ போக்க முடியவில்லை. அதை அழிக்கக் கூடிய பொருள் மனிதனின் ஆய்ந்த அறிவுதான்.

"பேரறிஞன் பிளாட்டோவும் தன் நாட்டுக்கும்—பிறநாட்டுக்கும் இடையே, பேதத்தையே சட்டரீதியாக அமைத்தான். ஏதென்ஸ் நகரத்துக்குள்ளே வேறொருவருக்கு உரிமையில்லை. ரோம் இப்படியே! இதேபோல, பல நாடுகளுக்குள்ளே ஏதோ ஒரு பாகுபாடு இருக்கத்தான் செய்துவருகிறது, நெடுநாளாக!

"ஆரணங்குகள் அணிகிற மணிமாலைகளைப்போல துவேஷ மணிகளையே கோர்த்து மாலையாகத் தொடர்ந்து அணிந்து கொண்டிருக்கிறார்கள் பல நாட்டினரும்; இப்பொழுது காலம் மாறுகிறது. இன்னமும் குரோதம் நீக்கப்படவில்லை.

"செஞ்சிலுவைச் சங்கம் இளம் உள்ளங்களிலே நல்ல உணர்வை ஊட்டக்கூடிய வகையிலே பணியாற்றுமேயானால் பெருவாரியாக இதிலே பலர் சேர்ந்து பழக்கப்படுவார்கள் என்று கருதுகிறேன். இத்தகைய—எல்லோரும் ஒன்றுபடக் கூடிய அமைப்பு இப்பொழுது தேவை. அரசியல் தொடர்புடையவர்களும் இதிலே சேர்வது சிறப்புடையது என்றே கருதுகிறேன். அப்படிச் சேருபவர்களைக்கண்டு பெருமைப்படுவேன்."

அம்பேத்கார் மரணம்பற்றி விசாரணை

சர்க்கார் போக்கினைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

புதுடில்லி, டிச. 9—

டாக்டர் அம்பேத்காரின் மரணம் குறித்து நடைபெற்ற விசாரணை பற்றி மக்கள்சபையில் பல கேள்விகள் எழுந்தன; கேள்விகளுக்கு உள்நாட்டு மந்திரி பந்த் பதிலுறுத்தார். ஆனால், விசாரணை அறிக்கையை வெளியிட மறுக்கும் சர்க்கார் போக்கினைக் கண்டித்து, எதிர்க்கட்சியினர் பலரும் வெளிநடப்பு செய்திருக்கின்றனர்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பண்டித பந்த், அம்பேத்கார் மரணம் குறித்து முதலில் விசாரணை எதுவும் தேவை இல்லை என்றுதான் சர்க்கார் கருதியதாகவும், ஆனால், 19 மக்கள்சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு விசாரணை கோரியதினாலேயே சர்க்கார் விசாரணை நடத்தியது என்றும், டெல்லி உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் விசாரணை நடத்தினார் என்றும், அவர் தனது அறிக்கையில் மரணம் இயற்கையாகச் சம்பவித்தது என்றும், இதில் சந்தேகத்திற்குத் துளியும் இடம் இல்லை என்றும் தெளிவாகத் தெரிவித்திருப்பதாகவும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் பல மக்கள்சபை உறுப்பினர்களும் இருப்பதாகவும், அறிக்கையில் அதிகாரி, தமக்குப் பழக்கமான மொழியில் சாட்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதினால் அவரது அறிக்கையை வெளியிடுவதற்கு இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

மதுவிலக்கிற்கு எதிராக காங்கிரசார் அணிவகுப்பு!

திட்டத்தைக்கைவிட ஆந்திர சர்க்காருக்கு வேண்டுகோள்

படுதோல்வியடைந்துவிட்டதாகப் புகார்

நெல்லூர், டிச. 8—

மதுவிலக்குத் திட்டத்தை ஆந்திர சர்க்கார் கைவிட்டுவிட வேண்டுமெனக்கோரி, நெல்லூர் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி ஒருமனதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறதாம்!

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மாவட்டக் கிளையின் முதற் கூட்டம் நேற்றுத்தான் நடைபெற்றது என்றும், இந்தக் கூட்டத்தில் ஆந்திர நிதிமந்திரி கோபால ரெட்டியும் கலந்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

மதுவிலக்குத் திட்டத்திற்கு என் சர்க்கார் தலைமுழுக்குப் போடக்கூடாதென, காங்கிரசார், கோபால ரெட்டியாரை விவாதத்தின்போது கேட்டனராம்!

கோபால ரெட்டியாரோ, திரும்ப 'நீங்கள் ஏதாவது தீர்மானம் போட்டீர்களா?' என்று கேட்டாராம்!

மாவட்ட குழுவினர், உடனே மதுவிலக்குத் திட்டத்தைச் சர்க்கார் கைவிட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில், ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவரான ஏ. சி. சுப்பா ரெட்டி எம.எல.ஏ., மதுவிலக்குத் தோற்றுவிட்டது என்றும், உடனே அதனை ரத்து செய்ய வேண்டுமெனறும் கடுமையாகத் தாக்கிப் பேசினாராம்!

தீர்மானத்தையும் அவர்தான் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்.

முக்கூட்டு மாநாடா?

புதுடில்லி, டிச. 10—

"தொழில் நீதிமன்ற முடிவுகள் அமுலாவது பற்றி ஆராய முக்கூட்டு மாநாடு ஏற்படுத்த மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது" என்று மக்கள் சபையில் உதவித் தொழில் அமைச்சர் அபீத்அலி தெரிவித்துள்ளார்.

சென்னை 35-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

11—12—57 இரவு 8 மணிக்கு சென்னை 35-வது வட்ட தி.மு.க. கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரவிருக்கின்றன.

பல்கலைக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம்

ஐதாராபாத், டிச. 10—

ஊதியத்தையும், பஞ்சப்படியையும் உயர்த்த வேண்டுமென்று கோரி, உஸ்மானிய பல்கலைக் கழக 4-ம் பிரிவு ஊழியர் சுமார் 2,000 பேர் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

கடந்த 20 நாட்களாக நடைபெற்றுவந்த வேலை நிறுத்த முறையைவிட்டு, இன்று புதிய முறையில் போராட முற்பட்டுள்ளனர்.

கல்லூரி வாயிலில் படுத்துக் கொண்டு அவர்கள் மறியல் செய்தனர்; இதன் விளைவாக 11 பெண்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழகக் கூட்டங்கள்

★

திருவெறும்பூர்:
ஊராட்சி மன்றத் திடலில்
11—12—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: கூ. மு. பெரியசாமி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
அன்பில்-தருமலிங்கம்
கே. காமாட்சி

★

இடையாற்றுமங்கலம்:
(லால்குடி வட்டம்)
செக்கடி மைதானத்தில்
11—12—57 இரவு 8 மணிக்கு
தலைவர்: எம். பிச்சை
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
அன்பில்-தருமலிங்கம்
கே. காமாட்சி

★

காட்டுநாயக்கன்பட்டி:
12—12—57 மாலை 4½ மணிக்கு
தலைவர்: வே. கோபால்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
சி. கிருட்டிணன்
இன்னிசை: க. சீனிவாசகம்

தடுப்புக் காவல் சட்டம் தேவையற்றது

'கருப்புச் சட்டம்' என எதிர்க்கட்சியினர் கண்டனம்

'இல்லாமல் இயலாது' என்கிறார் மந்திரி

புதுடில்லி, டிச. 9—

'இன்று நாடு உள்ள நிலையில், தடுப்புக் காவல் சட்டம் இல்லாமல் முடியாது' என்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் வாதாடினாராம்!

எதிர்க் கட்சியினர் பலரும், இந்தச் சட்டம் கருப்புச் சட்டம் என்று கூறி, இதனை நீடிப்பது கூடாது எனக் கடுமையாக எதிர்த்திருக்கின்றனர்!

"சட்டத்தை மீறவும், பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடவும் தூண்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள்; காஷ்மீர் பிரதேசத்தில் ஊளவாளிகள் உலவுகிறார்கள்; பஞ்சாபிலும், காரத்பூரிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் நடைபெறுகின்றன; அண்மையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் என்ன? சென்னை மாநிலத்தில் நடைபெற்ற சட்டப் புத்தக எரிப்புக் கிளர்ச்சி இவற்றை எல்லாம் பார்க்கும்போது, இந்தச் சட்டம் இன்றி மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதும், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் இயலாததாகும்"

என்று, பண்டித பந்த் வாதாடியிருக்கிறார்.

எதிர்த்துப் பேசியவர்கள், இந்தச் சட்டம் இருக்கும்போதுதான், நாட்டில் இத்தனை சம்பவங்களும் நடைபெற்றுள்ளன என்றும், இவற்றைத் தடுக்க சட்டத்திற்கு சக்தி இருக்கவில்லை என்றும், எனவே, இந்தச் சட்டம் நீடிப்பது கூடாது எனவும் வாதாடியிருக்கின்றனர்.

மூலச் சட்டத்தின் ஒவ்வொரு விதியையும் புனர் பரிசீலனை செய்யவும், திருத்தங்கள் கொண்டுவரவும், புதிய மக்கள் சபைக்கு அனுமதி வேண்டும் என்றும் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர்; ஆனால், சபைத் தலைவர் அதனை அனுமதிக்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.